4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.552/2021 நாள்: 11.02.2026 பி.வா.சா.1 – சந்திரா**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை -**

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். இறந்துபோன கோவிந்தராஜலு எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவருக்கு விவசாய பணி உண்டு என்றால் சரிதான். மேற்படி விவசாய பூமியில் கோழிப்பண்ணை நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் GV Trading Company நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் ஐஸ்வர்யா சிட்பண்ட்ஸ் என்ற நிறுவனத்தையும் நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் விவசாயத்திற்காக அவ்வப்போது வெளி நபர்களிடம் கடன் வாங்கி திருப்பி கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கு வாதியை எனக்கு தெரியும். வாதி Modern Irrigation என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். Modern Irrigation என்ற பெயரில் வாதி விவசாயத்திற்கு தேவையான உபகரணங்களை விற்பனை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது கணவரும் வாதியும் நண்பர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக எனது கணவர் வாதியின் கடையிலிருந்து விவசாயத்திற்கு தேவையான உபகரணங்களை வாங்குவது வழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியிடம் எனது கணவர் அவசர தேவைக்காக வாங்குவதும், பின்பு திருப்பி செலுத்துவதும் வழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் இறந்தபோது துக்கம் விசாரிக்க வாதி எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் மீது வாதி காசோலை வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். வாதி எனது கணவர் மீது 4 காசோலை வழக்குகள் தாக்கல்

செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி காசோலை வழக்குகள் ஒவ்வொன்றும் தலா ரூ.5 லட்சம் மதிப்புடையது என்றால் சரிதான். மொத்தம் ரூ.20 லட்சத்திற்கு வாதி எனது கணவர் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். வாதி எனது கணவருக்கு வங்கி பரிவர்த்தனை மூலமாக தான் மேற்படி காசோலை வழக்கிற்கான தொகையை அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். வாதி எனது கணவருக்கு கொடுத்த கடன் தொகையை திருப்பி கேட்ட போது எனது கணவர் வாங்கிய கடனுக்கு மேற்படி காசோலையை வாதியிடம் கொடுத்தார் என்றால் சாட்சி வாதி சீட்டு பணம் நடத்தி வந்தார் என்றும், அதில் எனது கணவர் வாடிக்கையாளர் என்றும், மேற்படி சீட்டு பணத்திற்கு ஆதரவாக எனது கணவர் காசோலைகளை கொடுத்தார் என்றும், சீட்டு தொகையை செலுத்திய பிறகு காசோலைகளை எனது கணவர் வாதியிடம் கேட்ட போது தரவில்லை, அவை தான் இந்த காசோலை என்று கூறுகிறார். எனது கணவர் இறந்த பிறகு வாதிக்கு எனது கணவர் பணம் கொடுக்க வேண்டும் என்றும், அதனால் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வாதி என்னிடம் சொல்லவில்லை. என்னுடைய முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் வாதிக்கும், எனது கணவருக்கு வரவு செலவு உள்ளது என்று ஒத்துகொண்டுள்ளேன் என்றால் சரிதான். வாதி ஏலச்சீட்டு நடத்தினார் என்றும், அதில் எனது கணவர் வாடிக்கையாளர் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வாடிக்கையாளர் என்ற முறையில் ஏலச்சீட்டிற்கு மாதத்தவணையை வங்கி பரிவர்த்தனை மூலமாக எனது கணவர் வாதிக்கு அனுப்பினார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது கணவரிடமிருந்து வாதி வங்கி கணக்கை தெரிந்து கொள்வதற்காக காசோலைகளை எனது கணவரிடமிருந்து வாங்கினார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. வாதியிடம் எனது கணவர் வாடிக்கையாளராக சேர்ந்த ஏலச்சீட்டிற்கு மாதம் எவ்வளவு தொகை செலுத்த வேண்டும், எவ்வளவு

ரூபாய்க்கான சீட்டு தொகை என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி சீட்டு நடத்தினார் என்றும், அதில் எனது கணவர் வாடிக்கையாளர் என்று காட்டுவதற்கு சீட்டு அட்டை அல்லது நோட்டு புத்தகம் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி எனது கணவருக்கு ரூ.22 லட்சம் தரவேண்டும் என்று பைசல் பேசப்பட்டது என்றும், நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன், யார் முன்னிலையில் பைசல் பேசப்பட்டது என்று எனக்கு தெரியாது. வாதி ஒருபோதும் ஏலச்சீட்டு நடத்தவில்லை என்றும், வாதிக்கு எனது கணவர் கொடுக்க வேண்டிய கடன் தொகையை வாரிசு என்ற முறையில் நாங்கள் செலுத்தாமல் இருப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி ஏலச்சீட்டு நடத்தினார் என்று என்னால் ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யமுடியவில்லை என்றால் சரியல்ல. வாதி காசோலை வழக்கிற்காக அனுப்பிய அறிவிப்பிற்கு எனது கணவர் பதிலறிவிப்பு அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது. எனது கணவர் வாதி தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கில் முன்னிலையாகாத காரணத்தினால் எனது கணவருக்கு எதிராக பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்ட பிறகு தான் எனது கணவர் வாதி தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கில் முன்னிலையானார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி சீட்டு தொகை தராதது சம்பந்தமாக எனது கணவர் வாதி மீது காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. வாதிக்கு தோட்டம், கோழிப்பண்ணை மற்றும் வசதி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி வசதியானவர் என்றும், அவர் எனது கணவருக்கு ரூ.20 லட்சம் கொடுப்பதற்கு வசதியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாவா சம்பந்தமாக எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை முன்ஜப்தி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது எனது கணவர் HDFC வங்கியில் கடன் வாங்கியிருந்தார் என்றால்

சரிதான். மேற்படி கடனை 22.12.2022 அன்று நான் முழுமையாக அடைத்துவிட்டேன் என்றால் அடைத்து விட்டேன், ஆனால் தேதி ஞாபகம் இல்லை. மேற்படி கடன் தொகை இரண்டு ரசீதுகள் மூலமாக நானும், எனது மகனும் திருப்பி செலுத்திவிட்டோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் தற்போது வரை எனது மாமனார் பெயரில் உள்ளது. தாவா சொத்து முதலில் எனது கணவர் பெயரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 04.01.2023 அன்று தாவா சொத்தை நான் எனது மாமனார் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மற்றொரு சொத்தை மேற்படி தேதியன்று செண்பகசெல்வி என்பவர் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது நான் மேற்படி கிரையங்களை செய்து கொடுத்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு எனது கணவர் வாங்கிய கடன் தொகை கிடைக்ககூடாது என்ற கெட்ட எண்ணத்தில் நானும், எனது மகனும் சேர்ந்து எனது மாமனாருக்கும், செண்பகசெல்விக்கும் வேண்டும் என்றே பொய்யாக கிரையத்தை ஏற்படுத்தி கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய்யான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்து போன எனது கணவரின் சொத்துக்களுக்கு நானும், எனது மகனும் மட்டும் தான் வாரிசுகள் என்பதால் வாதி கோரிய தாவா தொகையை செலுத்த கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.11 17:02:20 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.